1.12.2023 அ.சா.2 கணேசன் (பக்கம் 3)

sC.57−2013

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைகக்ப்பட்டு 1 மற்றும் 2 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை−**

நான் வெங்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். முதல் எதிரி பாஸ்கரும் வெங்குடி கிராமத்தில் தான் வசித்து வருகிறார். முதல் எதிரிக்கும் திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளனர். 2ம் எதிரி ஜானகிராமன் வெங்குடி கிராமத்தை சார்ந்தவர் அல்ல. அவர் சுங்குவார்சத்திரத்தை சார்ந்தவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1வது எதிரியுின் உறவினர் என்று மட்டும்தான் தெரியும். இந்த விவரம் எனக்கு மற்றவர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும். 1வது எதிரி பாஸ்கரன் இ்வவழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் காலகட்டத்திலேயே பயணிகள் ஆட்டோ வைத்து ஒட்டி வருகிறார் என்றால் சரிதான். நான் வசிக்கும் பகுதியிலேயே தான் முதல் எதிரி பாஸ்கரன் வசித்து வருகிறார் என்றால் இல்லை. என் மீது நிறைய சாராய வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றும் இருமுறை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாளில் இருந்து 15 நாட்கள் முன்னர் தான் நான் வேறு ஒரு வழக்கில் சிறையில் இருந்த வெளியில் வந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடைெபற்றதாக சொல்லபடும் கால கட்டத்தில் எனது குடும்பமும் எனது தாயாரின் குடும்பமும் ஒன்றாக தான் வசித்து வந்தோம். சம்பவம் நடைபெற்ற தாக சொல்லப்படும் நேரத்தில் நான் பெட்ரோல் போடவேண்டிய விவரத்தை என்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளுக்கும் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தாயாருக்கு மட்டும் தான் தெரியும். எங்கள் ஊரில் இருந்து பெட்ரோல் போடுவதற்காக வாலாஜாபாத் தான் செல்வோம்.காஞ்சிபுரத்திற்கு வரமாட்டோம். எங்கள் ஊரில் தான் வாலாஜாபாத்திற்கு வர சுமார் 5 கி.மீ ஆகும் என்றால் சரியல்ல. 1 கி.மீ தொலைவு தான் உள்ளது. எங்கள் ஊரில் இருந்து வாலாஜாபாத்திற்கு 5 கி.மீ. தொலைவு தான் உள்ளது என்றும் நான் இவ்வழக்கிற்காக வேண்டி 1 கி.மீ தொலைவு தான் உள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி பாஸ்கரன் வாலாஜாபாத்தில் குடியிருந்து வரவில்லை

என்றால் சரிதான். வாலாஜாபாத்தில் இருந்த காஞ்சிபுரத்திற்கு வரும் சாலை கிழக்கு மேற்காக தான் ெ சல்கிறது. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் காலத்தில் அது இருவழி சாலையாக தான் இருந்தது என்றால் சரிதான். செல்லியம்மன் கோவிலில் இருந்து 50 மீட்டர் தொலைவில் கருக்குபேட்டை என்ற பகுதி அமைந்துள்ளது என்றால் சரிதான். கருக்குபேட்டை பகுதியில் சாலையின் இருபுறங்களிலும் வீடுகள் உள்ளது. வாலாஜாபாத்தில் இருந்து எனது ஊரான வெங்குடிக்கு செல்லவேண்டும் என்றால் செல்லியம்மன் கோவிலை தாண்டி இடது பக்கம் செல்லவேண்டும் என்றால் சரிதான். வாலாஜாபாத்தில் இருந்து வெங்குடிக்கு செல்ல செல்லியம்மன் கோவிலுக்கு முன்னரே இடதுபுறத்தில் ஒரு சாலை உள்ளது என்றால் சரிதான். அதிலும் என் வீட்டிற்கு செல்லலாம் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாளில் நான் வண்டியோடு கீழே விழுந்து சாலையில் இழுத்து செல்லப்பட்டதனை காட்டவும் அது உண்மையா அல்லது பொய்யா என்ற விவரத்தை அறிய அந்த வாகனத்தை சோதனை செய்தாலே தெரியவரும் என்றால் சரிதான்.செல்லியம்மன் கோவிலில் இருந்து 10 அடிக்கு முன்னர் நான் கீழே விழுந்துவிட்டேன். செங்கல்பட்டு முதல் காஞ்சிபுரம் வரை உள்ள சாலை போக்குவரத்து மிகுந்த ஒரு சாலை என்றால் சரிதான். செங்கல்பட்டு முதல் காஞ்சிபுரம் வரும் சாலையில் தான் வெங்குடி கிராமமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதே சாலையின் ஓரத்தில் தான் செல்லியம்மன் கோவிலும் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரைணயில் சொல்லியுள்ளது போல 1ம் எதிரி பாஸ்கரனும் 2ம் எதிரி ஜானகிராமனும் தனித்தனி வாகனத்தில் வந்து என்னை எனது வண்டியில் மோதி என்னை கீழே தள்ளிவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு காயம்பட்ட காலத்தில் எனக்கு 4 சிறு குழந்தைகள் இருந்தனர். அந்த சமயம் என்னுடைய மனைவி என்னுடன் தான் இருந்தார். இவ்வழக்கு சம்பவத்தில் எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் 1ம் எதிரி பாஸ்கரன் மீது இருந்து முன் பகை காரணமாக இவ்வழக்கில் அவர் மீது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரி ஜானகிராமனுக்கும் எனது ஊர் வெங்குடி கிராமத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும்

அவர் மீது இவ்வழக்கில் வேண்டும் என்றே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுங்குவார்சத்திரத்திற்கும் வெங்குடி கிராமத்திற்கும் சுமார் 20 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். வெங்குடி கிராமத்தில் உள்ள மக்கள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் வாலாஜாபாத்திற்கு தினமும் வேலைக்கு செல்வார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வேலைக்கு செல்பவர்கள் காஞ்சிபுரம் முதல் செங்கல்பட்டு வரை செல்லும் பிரதான சாலைக்கு வந்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். 2வது எதிரி ஜானகிராமன் என்னுடைய இடது தோள்பட்டையில் வெட்டியதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தினை போலீஸ் விசாரைணயில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை 2ம் எதிரி ஜானகிராமன் எனது தலையில் வெட்டியதாக தான் சொல்லியுள்ளேன். ( இந்த கேள்வியை எதிரிகளின் வழக்குரைஞர் contradiction க்காக வேண்டி கேட்கின்ற காரணத்தினால் சாட்சி ஆமாம் இல்லை என்று தான் சொல்லவேண்டும் என்றும் பதில் சொல்ல கூடாது என்று தெரிவித்து எதிரி சொன்ன பதிலுக்கு தெரிவித்த ஆட்சேபனையின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது) முதல் எதிரி பாஸ்கரன் எனது வலது முன்னங்கையில் வெட்டியதாக முதல் விசாரைணயில் சொல்லியுள்ளதை போலிசாரின் விசாரைணயில் நான் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் தற்போது போலிசாரின் விசாரணையில் சொல்லியுள்ளதாக இ்வவழக்கிற்காக வேண்டிபொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சா.பொ.1 கத்தி என்னுடைய கத்தி என்ற காரணத்தினால் தான் அதை நீதிமன்றத்தில் வைத்து உடனடியாகஅடையாளம் காட்டப்பட்டது என்றால் சரியல்ல. சாபொ1 கத்தி சாதாரணமாக வெளி சந்தையில் தாராளமாக கிடைக்கககூடியது என்றால் சரிதான். சா.பொ1 கத்திக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் கா.துறையினர் வேண்டுகோளுக்கிணங்க அந்த கத்தியால் தான் காயம்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் நான் உள்நோயாளியாக 28 நாட்கள் சிகிச்சையில் இருந்ததாக என்னுடைய

முதல் விசாரைணயில் சொல்லியுள்ள விவரத்தினை கா.ஆய்வாளரின் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் இ்வவழக்கிற்காக வேண்டி சொன்னதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது நிறை குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ள காரணத்தினாலும் அதன் மூலம் நிறைய பகைகள் உள்ளதினாலும் அதன் மூலம் ஏற்பட்ட காயத்தினை 1வது எதிரி பாஸ்கரன் மீதுள்ள முன் பகை காரணமாக அவர் மீதும் 2ம் எதிரி மீதும் பொய்யான குற்றச்சாட்டை சுமத்துகிறேன் என்றால் சரியல்ல. கா.துறையினரின் விசாரைணயில் முதலில் என்னை யாரோ வெட்டிவிட்டாரகள் என்று சொல்லியுள்ளேன் என்றும் பின்னிட்டு தான் எதிரிகளை இவ்வழக்கில் இணைத்து அவர்களுக்கு எதிராக பொ'ய சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று 1ம் எதிரி பாஸ்கரனுக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை எடுத்துவந்தார் என்றும் அவர் எங்காவது பயணிக்கவேண்டி வந்தால் வேலு என்ற நபரை வைத்து இருசக்கர வாகனம் மூலம் பயணம் செய்து வந்தார் என்றால் தவறாகும்.

மறு விசாரணை – இல்லை